LIBRARY
11 JAN 2010
Eastern University, Sri Lanka.

# EASTERN UNIVERSITY, SRI LANKA

## FACULTY OF COMMERCE AND MAMAGEMENT

## EXTERNAL DEGREE PROGRAMME

**First Examination in Bachelor of Business Administration - 2006/2007 / Bachelor of Economics - 2007/2008 (Dec' 2009/Jan'2010)(Proper/Repeat)**

**EXB/EXE 1084 Financial Accounting**

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக — நேரம்: 3 மணித்தியாலங்கள்

கணித்தற் பொறி அனுமதிக்கப்பட்டுள்ளது

---

1. நிஷான் கம்பனியானது ஒவ்வொன்றும் ரூ.20 விலையிலான 40000 சாதாரண பங்குகளையும் ஒவ்வொன்றும் ரூ.10 விலையிலான 15% 20000 மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குகளையும் கொண்ட ரூ.1000000 மூலதனத்தைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. 30.06.2009 இல் உள்ளவாறு அதன் கணக்கேடுகளிலிருந்து தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி பின்வருமாறு.

**30.06.2009 இல் உள்ளவாறான பரீட்சை மீதி**

| விடயங்கள் | வரவு ரூபா | செலவு ரூபா |
|---|---|---|
| வழங்கி இறுத்த சாதாரண பங்கு மூலதனம் | | 800000 |
| வழங்கி இறுத்த 15% முன்னுரிமைப் பங்கு மூலதனம் | | 200000 |
| பொது ஒதுக்கம் | | 500000 |
| இலாப நட்டக் கணக்கு மீதி 01.07.2008 இல் | | 100000 |
| 15% தொகுதிக்கடன்கள் | | 200000 |
| நடைமுறைல்லாச் சொத்துக்கள் (கிரயத்தில்): | | |
| காணி கட்டடம் (காணி ரூ.300000) | 900000 | |
| தளபாடமும் பொருத்திகளும் | 400000 | |
| மோட்டார் வாகனங்கள் | 700000 | |
| 01.07.2008 இல் பெறுமானத்தேய்வு ஏற்பாடு: | | |
| காணி கட்டடம் | | 100000 |
| தளபாடமும் பொருத்திகளும் | | 50000 |
| மோட்டார் வாகனங்கள் | | 200000 |
| முதலீடுகள் | 300000 | |
| கடன்பட்டோர் / கடன்கொடுத்தோர் | 130000 | 150000 |
| செலுத்திய வருமான வரி | 150000 | |
| 2007/2008 காலாண்டுக்கான வருமான வரி ஏற்பாடு | | 30000 |
| ஐயக் கடனுக்கான ஏற்பாடு 01.07.2008 இல் | | 10000 |
| செலுத்திய தொகுதிக்கடன் வட்டி | 15000 | |
| செலுத்திய இடைக்காலப் பங்கிலாபம் - சாதாரண பங்கு | 10000 | |
| - முன்னுரிமைப் பங்கு | 15000 | |
| பூர்வாங்கச் செலவுகள் | 40000 | |
| முதலீட்டு வருமானம் | | 50000 |
| தீயழிவு நட்டம் | 25000 | |
| நன்கொடைகள் | 20000 | |
| காசும் வங்கியும் | 235000 | |
| இருப்புக்கள் 01.07.2008 இல் | 200000 | |
| கொள்வனவுகள் / விற்பனைகள் | 900000 | 2000000 |
| திரும்பல்கள் | 25000 | 50000 |
| நிர்வாக செலவினங்கள் | 150000 | |

| | | |
|---|---|---|
| விற்பனை விநியோகச் செலவினங்கள் | 160000 | |
| பெற்ற கழிவு | | 20000 |
| இயக்குனர் வேதனங்கள் | 100000 | |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 25000 | |
| | 4500000 | 4500000 |

**மேலதிகத் தகவல்கள்:**

I. 30.06.2009 இல் இருப்புக்கள்- ரூ.230000.

II. 30.06.2009 இல் சென்மதியாவுள்ள நிர்வாக செலவினங்கள் ரூபா. 10000

III. நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கு பின்வருமாறு பெறுமானத்தேய்வுக்கு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்:

கட்டடம் - 5% கிரயத்தில்
தளபாடம் பொருத்திகள் - 10% குறைந்துசெல் மீதியில்
மோட்டார் வாகனம் - 20% கிரயத்தில்

VI. கடன்பட்டோரிலிருந்து ரூ.10000 அறவிடமுடியாக்கடனாகப் பதிவழிப்புச் செய்யப்படல் வேண்டும். அத்துடன் மிகுதிக்கடன்பட்டோரில் 10% ஐயக்கடனுக்கு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

VII. 2007/2008 இன் இறுதிக் காலாண்டின் வருமான வரி ரூ.25000 என ஏற்றுக்கொள்ளப்பட்டு இவ்வாண்டில் செலுத்தப்பட்டது. நடப்பாண்டின் (2008/2009) இறுதிக் காலாண்டுக்கான வருமான வரியேற்பாடு ரூ.40000 என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

V. முதலீட்டின் சந்தைப் பெறுமதி நிதியாண்டின் இறுதியில் ரூ.290000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இப் பெறுமதியை கணக்கில் காட்டுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

VI. காணி ரூ.350000 ஆக மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. இப் பெறுமதியையும் கணக்கில் காட்டுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

VII. இயக்குனர்கள் பின்வருமாறு தீர்மானித்துள்ளனர்:

(அ) ரூ.50000 ஐ பொதுஒதுக்கத்திற்கு மாற்றுதல்

(ஆ) பூர்வாங்கச் செலவில் அரைவாசியைப் பதிவழித்தல்

(இ) சாதாரண பங்குதாரர்களுக்கு ரூ.20000 இறுதிப் பங்கிலாபத்தினையும் முன்னுரிமைப்பங்கு தாரர்களுக்குரிய இறுதிப்பங்கிலாபத்தினையும் வழங்குதல்.

**வேண்டப்படுவது :**

சாதாரண பங்குதாரருக்கு பிரசுரிக்கத்தக்க வகையில் கம்பனியின் 30.06.2009 இல் முடிவுற்ற ஆண்டுகான வருமானக் கூற்று, உரிமையில் ஏற்பட்ட மாற்றங்களின் கூற்று, மற்றும் 30.06.2009 இல் உள்ளவாறான ஐந்தொகை என்பவற்றைத் தயாரிக்குக. (குறிப்புக்களையும் செய்கைகளையும் தெளிவாகக் காட்டுக.)

**(25 புள்ளிகள்)**

LIBRARY
11 JAN 2010
Eastern University, Sri

**2.** ஒரு தனிவியாபாரியாகிய திரு.வடிவேல் என்பவர் அவரது கணக்கேடுகளை முறையாகப் பேணவில்லை. ஆயினும் 30.09.2009 இல் முடிவுற்ற அவரது நிதியாண்டிற்கான பின்வரும் நிதித் தகவல்களை வழங்கக் கூடியவராகவுள்ளார்.

i. 30.09.2009 இல் முடிவுற்ற ஆண்டுக்கான கொடுக்கல் வாங்கல்களின் சுருக்கம்:

| | ரூபா. |
|---|---|
| வங்கியிடப்பட்ட காசு | 150000 |
| வங்கி வசூலித்த பங்கிலாபம் | 2000 |
| வங்கி மூலம் செலுத்தப்பட்ட தனிப்பட்ட செலவுகள் | 26000 |
| வங்கி மூலம் செலுத்தப்பட்ட கொள்வனவுகள் | 122000 |
| கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசு | 250000 |
| காசோலை மூலமும் காசு மூலமும் செலுத்தப்பட்ட கொள்வனவுகள் | 160000 |
| கூலிகள் | 40000 |
| விநியோக செலவுகள் | 7000 |
| வாடகையும் வரியும் | 2000 |
| மின்கட்டணம் | 1000 |
| பொதுச் செலவுகள் | 4600 |

ii. 01.10.2008 இலும் 30.09.2009 இலும் உள்ளவாறான சொத்துக்களும் பொறுப்புக்களும்:

| | 01.10.2008 | 30.09.2009 |
|---|---|---|
| | ரூபா. | ரூபா. |
| முதலீடுகள் | 50000 | 50000 |
| வியாபாரக் கடன்பட்டோர் | 14000 | 20000 |
| இருப்புக்கள் | 20000 | 15000 |
| வங்கி மீதி | 8000 | 12000 |
| காசு மீதி | 300 | 400 |
| வியாபாரக் கடன்கொடுத்தோர் | 27300 | 30000 |

வேண்டப்படுவது:

பின்வருவனவற்றைத் தயாரிக்குக.

i. 01.10.2008 இல் உள்ளவாறான ஐந்தொகை
ii. 30.09.2009 இல் முடிவுற்ற ஆண்டிற்கான காசேடு (இரட்டை நிரல்)
iii. 30.09.2009 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வியாபார இலாப நட்டக்கணக்கு
iv. 30.09.2009 இல் உள்ளவாறான ஐந்தொகை
(செய்கைகளைத் தெளிவாகக் காட்டுக)

**(20 புள்ளிகள்)**

3. (I) அஸ்வர் என்னும் வியாபாரியின் 30.09.2009 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி இணங்கவில்லை. வித்தியாசம் ரூ.1745 தொங்கல் கணக்கு ஒன்றில் வரவில் இடப்பட்டு பரீட்சை மீதி இணங்கச்செய்யப்பட்ட பின்னர் (இறுதிக்கணக்குகள் தயாரிக்கப்பட முன்னர்) ஏடுகளைப் பரிசோதித்த போது பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

(i) சம்பளம் செலுத்தியது ரூ.9500 அக் கணக்கில் ரூ.5900 ஆக பதியப்பட்டிருந்தது

(ii) கொள்வனவுத் திரும்பல் நாளேடு ரூ.1000 ஆல் கூட்டிக் கூட்டப்பட்டிருந்தது.

(iii) பெற்ற வாடகை ரூ.4050 அக் கணக்கில் ரூ.5040 ஆக பதியப்பட்டிருந்தது

(iv) கடன் விற்பனை ரூ.1050 கடன்பட்டோர் கணக்கில் ரூ.105 ஆக பதியப்பட்டிருந்தது.

(v) மீளப் பெறப்பட்ட அறவிடமுடியாக்கடன் ரூ.5000 அக் கணக்கில் பதியப்படவில்லை

**வேண்டப்படுவது:**

(a) மேற்கூறிய வழுக்களைத் திருத்துவதற்கான (இறுதிக்கணக்குகள் தயாரிக்கப்பட முன்னர்) நாட்குறிப்புப் பதிவுகளைத் தருக.

(b) தொங்கல் கணக்கினை தயாரிக்குக.

**(10 புள்ளிகள்)**

**(II)** கமலா எனும் வியாபாரியின் காசேட்டின் வங்கி நிரல் 30.09.2009 இல் ரூ.44500 வரவு மீதியைக் காட்டியது. ஆனால் அதே மாதத்திற்கான அவரது வங்கிக் கூற்று வேறு ஒரு மீதியைக் காட்டியது. காசேட்டையும் வங்கிக் கூற்றையும் ஒப்பிடும் பொழுது பின்வரும் வேறுபாடுகள் கண்டு பிடிக்கப்பட்டன.

(i) கடன்கொடுத்தோருக்கு வழங்கப்பட்ட காசோலை ரூ.60000 அத் திகதி வரை வங்கியில் கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii) வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூ105000 காசோலைகளில் ரூ.55000 மாத்திரமே 30.09.2009 வரை வங்கியால் சேகரிக்கப்பட்டிருந்தது.

(iii) வங்கியால் பெறப்பட்ட பங்கிலாபம் ரூ.4000 மற்றும் வாடகை ரூ.6000 காசேட்டில் பதியப்படவில்லை.

(iv) வங்கியால் செலுத்தப்பட்ட காப்புறுதிக் கட்டணம் ரூ.2700 காசேட்டில் இடம்பெறவில்லை.

(v) காசேட்டின் செலவுப் பக்க கூட்டுத்தொகை ரூ.500 ஆல் குறைத்துக் கூட்டப்பட்டிருந்தது

(vi) வங்கிக் கட்டணம் ரூ.500 காசேட்டில் பதியப்படவில்லை.

(vii) சென்மதி உண்டியல் ரூ.2000 வங்கியால் செலுத்தப்பட்டிருந்தது. ஆனால் அது காசேட்டில் பதியப்படவில்லை

(viii) வருமதி உண்டியல் ரூ.6000 ஆனது ரூ.100 கழிவுடன் வங்கியில் மாற்றப்பட்டிருந்தது ஆனால் அது காசேட்டில் இடம்பெறவில்லை.

**வேண்டப்படுவது:**

(i) காசேட்டை திருத்துக.

(ii) திருத்திய காசேட்டின் படியான வங்கி மீதியை அடிப்படையாகக் கொண்டு 30.09.2009 இல் உள்ளவாறான வங்கிக்கணக்கிணக்கக் கூற்றினைத் தயாரிக்குக.

**(10 புள்ளிகள்)**

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

LIBRARY
11 JAN 2010
Eastern University, Sri Lanka

**4.** விளையாட்டுக் கழகம் ஒன்றின் நிதித்தரவுகள் பின்வருமாறு:

**31.12.2008** இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானச் செலவுக் கணக்கு.

| விடயங்கள் | | ரூபா. |
|---|---|---|
| வருமானங்கள்: | அங்கத்தவர் சந்தா | 28080 |
| | நுழைவுக்கட்டணம் | 18900 |
| | வாடகை | 7200 |
| மொத்த வருமானங்கள் (அ) | | **54180** |
| செலவுகள்: | ஊழியர் சம்பளங்கள் | 2700 |
| | எழுதுகருவிகள் | 3960 |
| | விளம்பரம் | 2880 |
| | காப்புறுதி | 1800 |
| | கணக்காயவுக் கட்டணம் | 900 |
| | விளையாட்டு உபகரணப் பெறுமானத் தேய்வு | 16200 |
| மொத்தச் செலவுகள் (ஆ) | | **28440** |
| செலவிலும் கூடிய வருமானம் (அ) – (ஆ) | | **25740** |

**31.12.2008** இல் முடிவுற்ற ஆண்டுக்கான கொள்ளல் கொடுத்தல் கணக்கு.

| விடயங்கள் | | ரூபா. |
|---|---|---|
| கொள்ளல்கள்: | | |
| ஆரம்ப காசு மீதி | | 7560 |
| நுழைவுக்கட்டணம் | | 18900 |
| அங்கத்தவர் சந்தா: | 2007 | 1080 |
| | 2008 | 26000 |
| | 2009 | 1720 |
| வாடகை | | 6240 |
| மொத்தம் (அ) | | **61500** |
| கொடுத்தல்கள்: | | |
| ஊழியர் சம்பளங்கள் | | 2640 |
| எழுதுகருவிகள் கொள்வனவு | | 4680 |
| விளம்பரம் | | 1980 |
| காப்புறுதி | | 2160 |
| முதலீடுகள் | | 36000 |
| மொத்தம் (ஆ) | | **47460** |
| இறுதிக் காசு மீதி (அ) – (ஆ) | | 14040 |

மேலதிகத் தகவல்கள்:

**(i)** 01.01.2008 இல் மீதிகள்:

| | ரூபா. |
|---|---|
| கட்டடமும் மைதானமும் | 79200 |
| விளையாட்டு உபகரணங்கள் | 45000 |
| விளம்பர முற்பணம் | 900 |
| சந்தா வருமதி | 2000 |

**(ii)** 31.12.2008 இல் சந்தா வருமதி: ரூ.1440

வேண்டப்படுவது:

பின்வருவனவற்றைத் தயாரிக்குக:

i. 01.01.2008 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று.

ii. 31.12.2008 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று.
(செய்கைகளைத் தெளிவாகக் காட்டுக)

**(20 புள்ளிகள்)**

**5.** அபி, சுபி, மற்றும் சசி ஆகியோர் இலாபநட்டங்களை முறையே 2:3:5 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்ளும் பங்குடமை ஒன்றின் பங்காளராவர். 31.12.2008 இல் அபி பங்குடமையிலிருந்து இளைப்பாறுவதற்கு தீர்மானித்தார். அதே திகதியிலிருந்து புதிய பங்காளராக ரதி என்பவர் அனுமதிக்கப்பட்டார். சுபி, சசி மற்றும் ரதி ஆகியோருக்கிடையிலான புதிய இலாப நட்ட விகிதம் 2:3:5 ஆக தீர்மானிக்கப்பட்டது. 31.12.2008 இல் உள்ளவாறான அவர்களது ஐந்தொகை பின்வருமாறு:

| பொறுப்புக்கள் | | ரூபா. | சொத்துக்கள் | ரூபா. |
|---|---|---|---|---|
| மூலதனக் கணக்கு: | அபி | 100000 | காணிகட்டடம் | 100000 |
| | சுபி | 150000 | பொறி இயந்திரங்கள் | 300000 |
| | சசி | 200000 | இருப்புக்கள் | 200000 |
| பொது ஒதுக்கம் | | 400000 | கடன்பட்டோர் | 300000 |
| ரதியிடமிருந்து பெற்ற கடன் | | 500000 | வங்கி மீதி | 530000 |
| கடன்கொடுத்தோர் | | 100000 | காசு மீதி | 20000 |
| | | **1450000** | | **1450000** |

புதிய பங்காளர் ரதி பின்வரும் பிரமாணங்களின் கீழ் பங்குடமையில் அனுமதிக்கப்பட்டார்.

**(i)** பொறி இயந்திரங்களின் பெறுமதியை ரூ.30000 ஆல் குறைத்தல்

**(ii)** காணிகட்டடம் ரூ.300000 ஆக மீள் மதிப்பீடு செய்யப்படுதல்

**(iii)** கடன்பட்டோரிலிருந்து 5% அறவிடமுடியாக்கடனாக பதிவழிப்பு செய்யப்படுதல்

**(iv)** பொது ஒதுக்கம் பங்காளரிடையே பங்கிடப்படல்

**(v)** நிறுவனத்தின் நன்மதிப்பு கடந்த மூன்று ஆண்டுகளின் சராசரி (தேறிய) இலாபங்களின் இரண்டு ஆண்டுகளின் கொள்வனவுக்குச் சமமான தொகையில் மதிப்பிடப்படல். இலாபங்கள்/நட்டங்கள்: 2005: ரூ.200000 (இலாபம்), 2006: ரூ.150000 (நட்டம்), 2007: ரூ.400000 (இலாபம்)

**(vi)** அபிக்கு செலுத்தவேண்டிய தொகையை பங்குடமையில் கடனாக விடல்

**(vii)** ரதியின் மூலதனப் பங்களிப்பானது மேற்கூறிய செம்மையாக்கங்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் உள்ளவாறான சுபியினதும் சசியினதும் இணைந்த மூலதனக் கணக்கு மீதிகளின் 1/5 தொகையாக இருத்தல்.

**(viii)** ரதியின் மூலதனத் தொகை அவரது கடன் கணக்கிலிருந்து மாற்றப்படுதல்

**(ix)** ரதி அனுமதிக்கப்பட்டவுடன் பங்குடமையின் நன்மதிப்புக் கணக்கு பதிவழிக்கப்படல்.

வேண்டப்படுவது:

பின்வருவனவற்றைத் தயாரிக்குக:

(1) மீள்மதிப்பீட்டுக்கணக்கு

(2) பங்காளர் மூலதனக் கணக்குகள் (நிரல் முறையில்)

(3) மேற்கூறப்பட்டுள்ள எல்லாச் சீராக்கங்களும் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் 31.12.2008 இல் உள்ளவாறான ஐந்தொகை
(செய்கைகளைத் தெளிவாகக் காட்டுக)

**(15 புள்ளிகள்)**